## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் - 2014

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த விரிவான வருமானக் கூற்று, ஒன்றிணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.1 மற்றும் 2.2.2. ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

#### மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினதும் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியினதும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**மறுப்பு அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்**

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2.1 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1.1 நிதிக்கூற்றுக்களை ஒன்றிணைத்தல்

இலங்கை தேசிய சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியின் பங்குகளில் 62.45 சதவீதம் உரித்தாக இருப்பதால் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.1.2 தொகுதியின் தொடர்ந்து இயங்குதல்

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மூலதனம் ரூபா 967 மில்லியனாக இருந்ததுடன், திரட்டிய நட்டம் ரூபா 81 மில்லியனாக இருந்தது. கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டிற்கு தாக்கமொன்று இல்லாமல் இருந்த போதிலும், வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனி தொடர்ச்சியாக நட்டமடைந்திருப்பதன் காரணமாக ஒன்றிணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் ரூபா 2,423 மில்லியனான திரண்ட நட்டத்தை பெற்றிருந்ததுடன் மூலதனம் ரூபா 2,702 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் பங்கு மூலதனத்தின் 89.7 சதவீதம் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டதுடன் வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியுடன் ஒன்றிணைந்த கணக்குகளை பரீட்சிக்கும் போது தொடர்ந்தும் நடாத்திச்செல்லல் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 13 இற்கு இணங்க இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 10 ஆன 108,361,891 பங்குகளின் பெறுமதி தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான வழியாக சுண்ணாம்புக்கல் சுரங்கத்தை வாடகைக்கு வழங்குதல் பெறப்படுகின்ற வருமானமாக இருந்ததுடன் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைந்துள்ள 5352 ஏக்கர் அறுவக்காமு காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூன்று கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளுக்குரிய

பேரேட்டுக் கணக்குகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 322,422 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதான அலுவலகத்தின் பேரேட்டில் உள்ள யாழ்ப்பாண கிளையின் நடைமுறைக் கணக்கு மீதிக்கும் யாழ்ப்பாணக் கிளையின் பேரேட்டிலுள்ள பிரதான அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 57,780 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நான்கு கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்குரிய மீதிகளை அவற்றிற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 39,838,480 கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வியாபாரப் பொறுப்பு மீதிகள் ரூபா 68,515,720 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 12,000,014 தொகை 2-3 வருடங்களும், ரூபா 38,453,542 தொகை 03 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைய கடன் மீதியாக இருந்ததுடன் அந்தக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் ஏனைய கிடைக்கவேண்டிய மீதி ரூபா 94,932,379 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,920,058 தொகை 1-2 வருடங்களுக்கும், ரூபா 5,141,093 தொகை 2-3 வருடங்களுக்கும் ரூபா 47,927,159 தொகை 03 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைய கடன் மீதிகளாகும். ரூபா 14,134,819 கூட்டுத்தொகையான கடன் மீதிக்காக காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 22,081,299 கூட்டுத்தொகையான நிலையான சொத்துகளுக்காக மெய்மையாய்வுச் சபை அறிக்கையும், ரூபா 14,134,819 கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களும் காலப்பகுப்பாய்வும், ரூபா 5,463,825 பெறுமதியான இறுதியிருப்பிற்காக இருப்பு மெய்மையாய்வுச் சபை அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 2.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 13,358,852 தொகையான பெறுமதி சேர் வரித் தொகை அனுப்பப்படாதிருந்ததுடன், ரூபா 4,282,739 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குச் செலுத்தவேண்டிய |

| | | |
|---|---|---|
| | | வரியிலிருந்து ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்படவேண்டிய ரூபா 5,002,459 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 | நிதியாண்டு முடிவடைந்ததும் உடனடியாக சொத்துக்கள் தொடர்பான மெய்யமையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 இன் 06 ஆம் இலக்க மேல் மாகாண நிதிக் கொள்கையின் 3 ஆம் பிரிவு | மேல் மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்படவேண்டிய முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 7,101,932 தொகையான விற்பனைப் புரள்வு வரித்தொகை அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 4.2.2 ஆம் பிரிவு | கூட்டிணைந்த திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றல் என்பன காலரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரியதாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 8.3.8 ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரமின்றியும் கூட்டுத்தாபனத்தின் நலிவான நிதி நிலைமையினையும் கவனத்திற் கொள்ளாது மீளாய்வாண்டின் போதும் ரூபா 54,121 தொகையான நன்கொடை மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2005 சனவரி 21 ஆந் திகதிய பீஈடீ/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (எ) | 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆண்டின் போது நட்ட நிலைமையில் அறிக்கையிடப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனத்தினால் செலுத்த முடியுமான ஊக்குவிப்புப் படி ரூபா 5,000 ஆக இருந்த போதிலும் 27 ஊழியர்களுக்காக ரூபா 13,500 படி ரூபா 364,500 தொகையொன்று வருடாந்த ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

அதன்படி ரூபா 229,500 தொகை ஊக்குவிப்புப் படியாக கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கூட்டுத்தாபனம் ரூபா 14,490,896 பற்றாக்குறையொன்றைப் பெற்றிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 424,686,915 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 410,196,019 இனால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் ரூபா 418,821,486 இனால் குறைவடைந்தமை இந்த பற்றாக்குறை குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தற்போது இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினதும் வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியினதும் பிரதான பணியாக சீமெந்து இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதாக இருந்ததுடன் இரண்டு நிறுவனங்களும் ஒரே பணியினைச் செய்கின்றமை அவதானிக்கப்பட்டது. 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் போது இந்த இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தும் அது இது வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காங்கேசன்துறை சீமெந்து கொங்கிரீட் உற்பத்தி மற்றும் விற்பனைப் பிரிவு 2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் வரையிலும் நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 18,765,596 ஆகும்.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கடன் அடிப்படையில் சீமெந்து விற்பனைக்காக விற்பனை முகவர் உரித்தை கையளிக்கும் போது கடன் வழங்கப்படுகின்ற பெறுமதிக்கு சமமான பிணை முறியொன்று பெறப்படாமை, கடன்பட வேண்டிய ஆகக்கூடிய அளவு உடன்படிக்கையில் குறிப்பிடப்படாமை, கடன் கொடுப்பனவுகளைப் புறக்கணிக்கின்றவர்களிடமிருந்து கடனை அறவிடும் முறை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமை, கடன் செலுத்துவதற்கு முடியாமல் இருக்கும் போது மீண்டும் மீண்டும் கடன் வழங்கியமை, வங்கி பிணைக்காக போலியான தகவல்கள் வழங்கியமை, முறையற்ற பிரகாரம் கடன் அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்காமை மற்றும் அறவிடவேண்டிய கடன் மீதி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற முகாமைத்துவ செயற்திறனின்மை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 66,249,030 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 671,843,724 கூட்டுத்தொகையான வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டு 16 வருடங்களுக்கு

மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித பிரதிபலனும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் தனியார் கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 6,400,000 தொகைக்காக 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையும் எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

(இ) உள்ளூர் தேசிய கம்பனியொன்றிற்கு இழப்பீடு செலுத்துவதற்காக பெறப்பட்ட வங்கிக் கடனுக்காக ரூபா 3,497,634 தொகை வட்டியாக செலுத்த வேண்டியிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள 752 ஏக்கர் காணி மற்றும் தொழிற்சாலையுடன் உள்ள கட்டிடத் தொகுதி மற்றும் மன்னார் முருங்கனில் அமைந்துள்ள 211 ஏக்கர் காணி என்பன அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இராணுவத்தின் பொறுப்பில் காணப்படுகின்றமையால் நீண்ட காலமாகக் காணப்பட்ட யுத்தத்தின் காரணமாகவும் விளைவற்று காணப்பட்டது.

(ஆ) புத்தளம், பாலாவி மற்றும் கல்லடி போன்ற பிரதேசங்களில் காணப்பட்ட 152 ஏக்கர் காணி ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுத்தாது விளைவற்றுக் காணப்பட்டது. அதில் 09 ஏக்கர் காணிப் பகுதியில் சட்டரீதியற்ற குடியிருப்பாளர்களினால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பற்ற மற்றும் பயன்படுத்தப்படாத இந்தக் காணியில் காடு வளர்ந்திருந்தமையால் சட்டரீதியற்ற குடியிருப்பாளர்களின் குடியிருப்பைத் தடுக்க முடியாதிருந்தது.

(இ) மன்னார் மாவட்டத்தில் புலியப்படி இறக்கம் (Putiyadi Irekkam) இல் அமைந்துள்ள 604 ஏக்கரையுடைய களிமண் மற்றும் சுண்ணாம்புக்கல் படிவுகளுடன் 1191 ஏக்கர் காணி நீண்ட காலமாக வாடகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தென ஆவணங்களின்படி வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கடந்த காலத்தில் காணப்பட்ட யுத்த நிலைமையின் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்தமையால் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. இடம் பெயர்ந்த குடும்பங்களுக்காக இந்தக் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்படாத காலியில் அமைந்துள்ள 06 ஏக்கர் 11 பேர்ச் காணி விளைவற்றுக் காணப்பட்டது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டம்**

இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்து குறிப்பிட்ட திகதியில் விடுவித்து கொள்ளாமை காரணமாக ரூபா 145,329 தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 76 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 57 ஆகவும் இருந்தமையால் 20 வெற்றிடங்களுடன் மிகையாக ஒரு உத்தியோகத்தரையும் உள்ளடக்கியிருந்தது. இந்த பதவியணியினரில் 33 பேர்

காங்கேசன்துறை கிளையில் சேவையற்றிருந்ததுடன் அந்தக் காணி இராணுவத்தினால் கையேற்கப்பட்டமையால் அந்த ஊழியர்களுக்காக சுயமாக ஓய்வுபெறச் செய்யும் உத்தேசத்திட்டமொன்று அமைச்சின் ஊடாக திறைசேரிக்குச் சமர்ப்பித்து அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தரின் வெற்றிடமான பதவிகளுக்காக 2011 நவம்பர் 17 ஆந் திகதிய எம்எஸ்டி 30 ஆம் இலக்க சுற்றிக்கையில் குறிப்பிடப்பட ஆட்சேர்ப்புக் கொள்கைகளின் படி அடிப்படைத் தகைமை கொண்டிராத நபரொருவரைச் சேர்த்து அவருக்கு சம்பளமாக மீளாய்வாண்டில் ரூபா 485,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டத்தின் படி இலக்கிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் மீளாய்வு செய்து அவற்றைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இலக்கிடப்பட்ட விற்பனை வருமானம் ரூபா 832,000,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 285,657,759 ஆனமையால் இலக்கிடப்பட்ட வருமானத்தில் 34 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது.

### 5.2 கொள்வனவுத்திட்டம்

மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவுத் திட்டமொன்று முழுக் கூட்டுத்தாபனத்தையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் 2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் 5,352 ஏக்கர் அளவிலான அறுவக்காழுவில் அமைந்துள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கமொன்று 1995 ஆம் ஆண்டின் போது சீமெந்து உற்பத்திக்காக சுண்ணாம்புக்கல் அகழ்வுக்கு ஹொல்சீம் லங்கா தனியார் கம்பனிக்கு 50 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய வாடகை ஆண்டொன்றிற்கு ரூபா 26,516,620 ஆக இருந்ததுடன், உடன்படிக்கையின் நிபந்தனையின் படி 50 வருடத்திலும் குத்தகையைத் திருத்தம் செய்யும் இயலுமை கூட்டுத்தாபனத்திற்குக் காணப்படவில்லை. அதனால் 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் போது இந்த சுண்ணாம்புக்கல் சுரங்கம் தொடர்பான குத்தகை உடன்படிக்கை மீண்டும் திருத்தம் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிதிக் கட்டுப்பாடு
(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்கள்
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு